


## முன்னுரை

பெண்களும் ஆண்களும் சமமா? இது எல்லா சமுதாயத்திலும் மிகவும் விவாதத்திற்குரிய கேள்வியாகவே உள்ளன. பாலின சமத்துவம் குறித்தான விவாதங்கள் வரலாற்றில் பல ஆண்டுகளாகவே உள்ளன. அது இன்னும் தொடர்கின்றது.

## யார் இந்த விவாதங்களுக்கு எதிராக உள்ளனர்?

மதம், அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகள்தான்.

கல்வி, பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் பெண்கள் இப்போதை விடவும் பின்தங்கி இருந்தனர் என்பது உண்மையே.

மதம், ஜாதி, சித்தாந்தம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பொதுமக்களிடையே அவர்களின் பிரதிநிதித்துவம் பெயரளவில்தான் இப்போதும் உள்ளன.

நவீன மாதர் சங்க ஆர்வலர்கள், பெண்களுக்கான அனைத்து உரிமைகளையும் இஸ்லாம் வழங்குகின்றனவா? என்ற வினாவை எழுப்பிய வண்ணமிருக்கிறார்கள் நவீன கால இஸ்லாமிய அறிஞர்களும் இந்த வினாவைத் தீர்த்து வைக்க தவறிவிட்டார்கள் என்பது கசப்பான உண்மை.

ஆனால் பெண்களின் விஷயத்தில் இஸ்லாம் பற்றிய கருத்துக்கள் தற்போதைய சமுதாயத்திற்கு மிகவும் தெளிவானதும், பொருத்தமானதும் ஆகும்.

பொதுமக்களின் பிரதிநிதித்துவத்துடன் மட்டுமல்லாமல் ஆண்களோடு ஒப்பிடுகையிலும் பெண்களின் உரிமைகள் பற்றிய எல்லா விவாதத்திலும் பாகுபாடு காணப்படுகிறது.

ஆண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்திலிருந்து புறக்கணிப்பும் பெண்கள் தாங்கள் குறைந்த எண்ணிக்கையிலான சமுதாயத்தின் இரண்டாம் குடிமக்கள் என்றும் நம்பினர். இந்த காரணங்களால் பெண்ணிய சிந்தனை உருவானது. மேலும் ஆண்கள் போன்றே பெண்களுக்கும் சமஉரிமை கோரிக்கை எழுகின்றன.

பெண்கள் சுதந்திரம் பற்றி எழுதிய ஆசிரியர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருந்தனர். எனவே சமுதாயம் பெண்களின் நலன்களை அடையாளம் காண தவறிவிட்டது என்பதே எதார்த்தம்.

## பெண்கள் எப்படி ஓரங்கட்டப்பட்டனர்?

அனைத்து துறைகளிலும் பெண்கள் நியாயம் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். எல்லா நகரத்தின் தொடக்கத்திலும் அனைத்து பொது விவகாரங்களும் ஆண்களால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டன. எனவே பெண்கள் சமுதாயத்தைப் பற்றிய பொது அறிவு இல்லாதவர்களாக இருந்தனர். பொது விவகாரங்களைப் பற்றிய அறிவு இல்லாதது தலைமுறை தலைமுறையாக இப்போது வரை தொடர்கின்றன.

பெண்களுக்கான பொது விவாதங்களில் பெண்களின் ஆலோசனைகள் இல்லாமல் கருத்துக்களும், விளக்கங்களும் உருவாக்கப்பட்டன. எனவே பெண்களின் ஆலோசனைகள் பெரும்பான்மையான கருத்துகளில் விவாதிக்கப்படவில்லை.

## இஸ்லாமிய பாலின சமன்பாடுகள்

இஸ்லாமிய பெண்களின் நிலைமை இன்னும் விவாதங்களின் சூடான தலைப்பாகவே உள்ளது. இஸ்லாம் ஒரு தவறான வழிபாட்டு மதமாக தாக்கப்படுகிறது.

மறுபுறம் நவீனகால இஸ்லாமிய அறிஞர்கள் பெண்களுக்கான சமத்துவம், மரபுரிமை மற்றும் இன்னபிற சிறப்பு சலுகைகள்

போன்றவற்றை சுட்டிக்காட்டுவதில் பின்தங்கிவிட்டனர். உண்மையில் இஸ்லாமிய பெண்கள் பொது தளத்தில் பெரும்பாலும் முன்னேறவில்லை என்பது உண்மைதான்.

**பெண்கள் பொதுப்பணிகளில் ஈடுபடுவதை இஸ்லாம் அனுமதிக்கிறதா? ஆண் - பெண் பணிகளில் ஏதாவது வேறுபாடு இருக்கின்றதா?**

அல்குர்ஆன் கூறுகிறது;

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ

ஒரே ஆத்மாவிலிருந்து உருவாக்கப்பட்ட மனித குலமும் பெண்களும் சமமானவர்கள் என்று குர்ஆன் குறிப்பிடுகிறது.

**- அல்குர்ஆன் : 4 : 1**

ஆனால் பிற சமுதாயங்களில் குர்ஆனிய இச்சமத்துவம் நடைமுறைப்படுத்துவதை காணமுடியவில்லை.

**சமத்துவம்**

உயிரியளவில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் வித்தியாசமாக உள்ளனர். இது ஒரு விஞ்ஞான உண்மை. எனவே நாம் அவர்களை சமன் செய்ய முயற்சிக்கும் போது அது கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் இருவரும் தனித்தனி மாதிரியாக கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் இருவரும் ஒரே வரிசையில் சமமாக இருந்தால் அது சரியான பார்வை அல்ல.

குறிப்பிட்ட சிலவற்றில் ஆண் பெண்களின் ஒரு பாலினத்தவருக்கு கிடைக்கும் சலுகை. அது அவருக்கு நல்லதாகும். மற்றவர்களுக்கும் அதுவே நல்லதாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

இந்த எதார்த்தத்தை முன்வைத்து குர்ஆன் இருவருக்கிடையே சமத்துவத்தை விட நீதியைத்தான் வலியுறுத்துகிறது.

இஸ்லாத்திலுள்ள பாலின கருத்து என்பது நீதி, கொள்கைகள் மீது தீட்டப்பட்டது. உயரியல் வேறுபாடுகள் பெண்களின் மேம்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. ஒரு மனிதனாக கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பெண்களுக்கும் சம உரிமை உண்டு.

இருவரில் ஒருவருக்கு பசியை தீர்த்துக் கொள்வதற்கு நான்கு துண்டு ரொட்டியும் மற்றவருக்கு இரண்டு துண்டு ரொட்டியும் போதும் எனும் போது, இல்லையில்லை அது சமமாகாது. இருவருக்கும் சரிபாதி மும்மூன்று துண்டுகள்தான் வழங்க வேண்டும் என்பது எப்படி நீதியாகும்?

உடல் இடை பெருத்தவருக்கு நான்கு துண்டு ரொட்டியும், இளைத்தவருக்கு இரண்டு துண்டு ரொட்டியும் வழங்குவது என்பது நீதியாகும். இங்கு சம உரிமை என்பதை விட சமநீதி என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். இதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது.

இந்த கண்ணோட்டத்தில் பெண்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ள சொத்துரிமை குறித்த கணக்கை பார்த்தோமேயானால் இஸ்லாமிய சமநீதியை அறிவுப்பூர்வமாக அறியலாம்.

**மற்ற மதங்களிலும் சமூகத்திலும் பெண்கள்**

கிரேக்க நாட்டில் பெண்கள் இழிவானவள் என்றும் ஷாத்தானிய செயலால் உண்டான அசுத்தமானவள் என்றே அழைத்தும் வந்தனர். சந்தைகளில் விற்பனை, வாங்கும் பொருளாகவும், சொத்துரிமை, பொருளாதாரம் மறுக்கப்பட்டவளாகவும் பெண்களை வைத்திருந்தனர். பெண்களை விபச்சார சாதனமாக பயன்படுத்தி வந்தனர்.

கிரேக்க தத்துவஞானி என்றறியப்பட்ட சாக்ரடீஸ் கூட பெண் என்பவள் வெளித்தோற்றம் அழகு மிக்கதும் அதன் பழத்தை உண்பதால் குருவிகள் கூட இறந்து விடும் விஷம் தோய்ந்த மரம் போன்றவள் என்றார்.

ரோம் நகரவாசிகள் பெண்களை தூண்களில் கட்டி கொதிக்கும் எண்ணையை அவள் மேனியில் ஊற்றி சித்ரவதை செய்து ரசித்து வந்தனர். ஏனெனில் அவள் உயிரற்றவள், உணர்வற்றவள் என்கிற அளவுக்கு எண்ணம் கொண்டிருந்தனர். மட்டுமல்ல. பெண்களை பந்தைய குதிரைகளில் கயிற்றால் கட்டி வேகமாக இழுத்தே வதைக்கும் வக்கிர புத்தி கொண்டிருந்தனர்.

முற்கால சீனர்கள் பெண்களை அடிமைகளைப் போன்று விற்றுக் கொள்ளவும் கணவன்மார்கள் உரிமைப் பெற்றிருந்தனர். விதவைகளை உயிரோடு புதைக்கும் வழக்கம் கொண்டிருந்தனர்.

யூதர்கள் பெண்களுக்கான எந்தவொரு உரிமையும் தரும் வழக்கம் அவர்களிடம் இல்லை. கணவன் இறந்த அன்றே

மனைவியையும் இறக்க வைப்பதும், கணவனின் அதே மண்ணறையில் அவளை உயிரோடு புதைத்தும் வந்தனர்.

மேலும் யூதர்கள் திருமணமாகாத அல்லது கணவனால் கைவிடப்பட்ட வாழாவெட்டியான பெண்களை தீண்டடத்தகாதவர் களாகவும் கண்டனர். மாதவிடாய் ஏற்பட்ட பெண்களோடு அமரவோ, அமர்ந்து உணவு அருந்தவோ, தொடவோ, தீண்டவோ மாட்டார்கள். வேறு சிலர் மாதவிடாய் பெண்கள் சுத்தமாகும் வரை அவர்களுக்கு தனி கூடாரம் அமைத்து அதன் கதவருகே உணவையும் தண்ணீரையும் வைத்து விடும் வழக்கம் கொண்டிருந்தனர்.

இந்து மதத்தில் பெண்கள் சத்யகிரகம், தேவதாசி வழக்கம் மற்றும் ஒருவளை ஒன்றுக்கு மேற்பட்ட கணவன்கள் கைகாரியம் செய்தல், விதவை மறுமணத்தை மறுத்தது, மாதவிடாயில் பெண்களை தீண்டடத்தகாதவர்களாக பாவித்தல் போன்ற கேடுகெட்ட பழக்க வழக்கம் இருந்து வந்தன.

பாரசீகவாசிகளிடம் தாய், சகோதரி, தாய்மார்களின் சகோதரி, தந்தைமார்களின் சகோதரி, சகோதரர், சகோதரர்களின் மகள் ஆகியோர்களை திருமணம் செய்து கொள்ளும் வழக்கமிருந்தன. மாதவிடாய் காலத்தில் ஊரை விட்டு தள்ளிவைக்கும் வழக்கமும் அவர்களிம் இருந்தன. கணவன் தனது மனைவியை விவாகரத்து செய்த பின்னும் அவன் விரும்பியபடியே அவள் வாழவோ அல்லது இறக்கவோ முடிவு செய்யும் அதிகாரம் அவனுக்கிருந்தன.

கிருஸ்தவர்கள், பெண் மிருகமே அன்றி மனித படைப்பல்ல. அவளை சாத்தானாகவே கருத முடியும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர்.

அரபுகள் பெண்களை சொத்துரிமை அற்றவர்களாக வைத்திருந்தனர். கணவன் இறந்த பின் ஆண்மகனே வாரிசாவான். மகனுக்கு கிடைக்கும் சொத்துக்களில் மனைவியும் உட்படுவாள். அறியாமைகால அரபுகளிடம் மனைவிகளுக்கான எந்த அடிப்படை உரிமையும் கணவனிடம் இருக்கவில்லை. எத்தனை முறை வேண்டுமானாலும் விவகாரத்து செய்து கொள்ளலாம். எத்தனை மனைவியையும் வைத்துக் கொள்ளலாம்.

இரண்டிற்கும் எந்தவித கணக்கும் வழக்கும் கிடையாது. விபச்சாரத்திற்கு கூலி பெறுவதும் கூட மறுக்கப்பட்டாள். நல்ல உணவுகள்

ஆண்களுக்கானது. பெண்கள் நல்லுணவுகள் மறுக்கப்பட்டார்கள். கேவலம், வறுமைக்கு பயந்து பெண் குழந்தை உயிரோடு புதைக்கப்பட்டாள்.

கடந்த காலத்தில் பிற சமூக மதங்களில் பெண்களுக்கான சமநீதி, சமஉரிமை மறுக்கப்பட்டு விவாதம் இப்போதும் தொடர்கிறது. அதோடு இன்று பெண்களுக்கு சமத்துவத்தை ஏற்படுத்துவதாகக் கூறி மென்மேலும் பிறபோக்குத்தனமே தொடர்கதையாகி தேய்கிறது.

பெண்களை ஆண்களுக்கு நிகராக படிக்க வைக்கிறோம். வேலை வாய்ப்பு வழங்குகிறோம். சுதந்திரம் தருகிறோம் என்று கூறி அவர்களின் சமநீதி, சமஉரிமைகள் என்பவற்றை திரும்பவும் பின்னோக்கியே நகர்த்துகின்றனர்.

ஆம் இன்று நவீன மங்கையர் பதினெட்டு வயது அடையும் முன்பே பொருளீட்டவும் வாழ்வாதாரத்திற்காக வீட்டை விட்டும் துரத்தவும் படுகிறாள். தமது வீட்டு வாடகை, உணவு, உடை செலவுகளுக்கான தொகையினை சுமத்தப்படுகிறாள். அதுவும் சமத்துவம் என்கிற பெயரில்தான் இந்த கொடுமையும் நடக்கிறது.

இங்கு பெண்களுக்கான மரியாதையும் இயற்கைத்தனமும் மீறப்படுவதுடன் அவளுக்கான சமநீதி என்பது அப்பட்டமாக மீறப்படுகிறது. வீட்டை விட்டு வீதிக்கு வருவதும், ஆண் பெண் இருவரும் சம்பாதிப்பதும்தான் சம உரிமை, சமத்துவம் என்ற தவறான புரிதல் வலுக்கட்டாயமாக திணிக்கப்படுகிறது. வேலைக்கான தேர்வு பெண்களுக்கு விருப்பமானது. ஆனால் ஆண்களுக்கு கட்டாயமானது.

இதனால் ஏற்படும் விபரீதங்களை அறிக்கைகளாக நாம் காண்கிறோம். 1990 - 2008 ஆண்டுகளுக்கிடையே பாலியல் பலாத்காரம் இருமடங்காக அதிகரித்துள்ளன. இந்தியாவில் 2011 ஆம் ஆண்டு மட்டும் 24206 பாலியல் பலாத்காரம் நடந்துள்ளதாக குற்றப்புலனாய்வு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு இருபது நிமிடங்களில் ஒரு பாலியல் பலாத்கார வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இது பாதிக்கப்பட்டவர்கள் தானாக முன் வந்து பதிவு செய்யும் வழக்கின் எண்ணிக்கையாகும். பதிவு செய்யாத வழக்குகளின் எண்ணிக்கை பன்மடங்கு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**குர்ஆனின் சில போதனைகளைப் பார்ப்போம்**

**பெண் பிறப்பு பற்றி**

وَإِذَا بُشِّرَ أَحَدُهُمْ بِالْأُنْثَىٰ ظَلَّ وَجْهُهُ مُسْوَدًّا وَهُوَ كَظِيمٌ ، يَتَوَارَىٰ مِنَ الْقَوْمِ مِنْ سُوءِ مَا بُشِّرَ بِهِ ۚ أَيُمْسِكُهُ عَلَىٰ هُونٍ أَمْ يَدُسُّهُ فِي التُّرَابِ ۗ أَلَا سَاءَ مَا يَحْكُمُونَ

அவர்களில் ஒருவனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது என்று சுபச் செய்தி கூறப்பட்டால் அவன் முகம் கறுத்துவிடுகிறது. அவன் கோபமுடையவனாகிறான். எதைக் கொண்டு சுபச் செய்தி கூறப்பட்டானோ, (அதை தீயதாகக் கருதி) அந்தக் கெடுதிக்காக (த் தம்) சமூகத்தாரை விட்டும் ஒளிந்து கொள்கிறான். அதை இழிவோடு வைத்துக் கொள்வதா? அல்லது அதை (உயிரோடு) மண்ணில் புதைத்து விடுவதா? (என்று குழம்புகிறான்) அவர்கள் (இவ்வாறெல்லாம்) தீர்மானிப்பது மிகவும் கெட்டதல்லவா?

**- அல்குர்ஆன் : 16 : 58,59**

**கல்வி வேலை வாய்ப்பு**

وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللَّهُ بِهِ بَعْضَكُمْ عَلَىٰ بَعْضٍ ۚ لِلرِّجَالِ نَصِيبٌ مِمَّا اكْتَسَبُوا ۖ وَلِلنِّسَاءِ نَصِيبٌ مِمَّا اكْتَسَبْنَ ۚ وَاسْأَلُوا اللَّهَ مِنْ فَضْلِهِ ۗ إِنَّ اللَّهَ كَانَ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا

மேலும் எதனால் உங்களில் சிலரை வேறு சிலரை விட அல்லாஹ் மேன்மையாக்கியிருக்கின்றானோ அதனை (அடைய வேண்டுமென்று) பேராசை கொள்ளாதீர்கள். ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு. (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்(வற்றில் உரிய) பங்குண்டு. எனவே அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள். நிச்சயமாக! அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

**- அல்குர்ஆன் : 4 : 32**

**சமூகக் கடமை**

وَالْمُؤْمِنُونَ وَالْمُؤْمِنَاتُ بَعْضُهُمْ أَوْلِيَاءُ بَعْضٍ ۚ يَأْمُرُونَ بِالْمَعْرُوفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَيُؤْتُونَ الزَّكَاةَ وَيُطِيعُونَ اللَّهَ
وَرَسُولَهُ ۚ أُولَٰئِكَ سَيَرْحَمُهُمُ اللَّهُ ۗ إِنَّ اللَّهَ عَزِيزٌ حَكِيمٌ

முஃமினான ஆண்களும், முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள். தொழுகையைக் கடைபிடிக்கிறார்கள். (ஏழை வரியாகிய) ஸகாத்தை (முறையாகக்) கொடுத்து வருகிறார்கள். அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

**- அல்குர்ஆன் : 9 : 71**

**வெகுமதி**

உங்களில் ஆணோ, பெண்ணோ எவர் (நற்செயல் செய்தாலும்) அவர் செய்த செயலை நிச்சயமாக வீணாக்க மாட்டேன். (ஏனெனில் ஆணாகவோ, பெண்ணாகவோ இருப்பினும்) நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர்தாம்.

**- அல்குர்ஆன் : 3 : 195**

ஆகவே ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, யார் ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள். இன்னும் அவர்கள் இம்மியேனும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.

**- அல்குர்ஆன் : 4 : 124**

مَنْ عَمِلَ صَالِحًا مِّن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُ حَيَاةً طَيِّبَةً ۖ
وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُم بِأَحْسَنِ مَا كَانُوا يَعْمَلُونَ

ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற்செயல்களைச் செய்தாலும்,

நிச்சயமாக! நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம். இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் வழங்குவோம்.

– அல்குர்ஆன் : 16 : 97

நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும், நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும், பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்.

**- அல்குர்ஆன் : 33 : 35**

**வாதிடுவதற்கான உரிமை**

قَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّتِي تُجَادِلُكَ فِي زَوْجِهَا وَتَشْتَكِي إِلَى اللّٰهِ وَاللّٰهُ يَسْمَعُ تَحَاوُرَكُمَا ۚ إِنَّ اللّٰهَ سَمِيعٌ بَصِيرٌ

(நபியே!) எவள் தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்து, அல்லாஹ்விடமும் முறையிட்டுக் கொண்டாளோ அவளுடைய வார்த்தையை நிச்சயமாக அல்லாஹ் செவியேற்றுக் கொண்டான். மேலும் அல்லாஹ் உங்களிருவரின் வாக்கு வாதத்தையும் செவியேற்றான். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியேற்பவன். (எல்லாவற்றையும்) பார்ப்பவன்.

**- அல்குர்ஆன் : 58 : 1**

முந்தைய மதங்களிலும் மக்கள் கொள்கைகளிலும் பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சம உரிமை, சமநீதியை இஸ்லாம் பெண்களுக்கு முழுமையாக வழங்கி வந்தவற்றை மேலே கண்டோம்.

இஸ்லாம் பெண்களையும் ஆண்களையும் ஒரே

நேர்கோட்டில்தான் காண்கிறது. அல்லாஹ்வை வழிபடுவது, கொள்கை, சட்டங்களை நடைமுறைப்படுத்துவது. நன்மை, தண்டனை, கடமை, விவாதம், ஆலோசனை, பொருளாதாரம் போன்றவற்றில் ஆண்களுக்கு நிகர் பெண்கள் என்பது இஸ்லாமிய வழிகாட்டலாகும். ஏனெனில் மொத்த சமூக எண்ணிக்கையில் பெண்கள் சரிபாதி எண்ணிக்கை கொண்டவர்கள் என்பதே இஸ்லாமியப் பார்வை ஆகும்.

وَأَنَّهُ خَلَقَ الزَّوْجَيْنِ الذَّكَرَ وَالْأُنْثَى

இன்னும் நிச்சயமாக அவனே ஆண் பெண் என்று ஜோடியாகப் படைத்தான்.

**- அல்குர்ஆன் : 53 : 45**

கணவன்களுக்குப் பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று, முறைப்படி அவர்கள் மீது பெண்களுக்கும் உரிமையுண்டு.

**- அல்குர்ஆன் : 2 : 228**

## திருநங்கை எனப்படும் மூன்றாம் பாலினத்தவர்கள்

இதன் விவாதம் இன்று கவனிக்கத் தக்கதாகும். ஆண்கள் பெண்களாகவும், பெண்கள் ஆண்களாகவும் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நவீன கலாச்சாரம் வளர்ந்து வருகிறது. பிறப்பில் பாலின குறைகளை நவீன சிகிச்சைகளின் மூலம் சரி செய்து கொள்ளலாமே அன்றி பாலின மாற்றம் என்பது ஏற்கத்தக்கதல்ல. பிறப்பில் பாலின குறையுள்ளவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். குறைபாடு அவர்களின் தவறல்ல. சரியான சிகிச்சை மட்டுமே அவர்களுக்கான நீதி ஆகும். அவர்களின் சிகிச்சையை புறக்கணிப்பது ஏற்கக்கூடியதுமல்ல.

## ஓரினச் சேர்க்கை

இயற்கையின் சமூக ஒழுங்கிற்கு எதிரான ஓரினச் சேர்க்கை விலங்குகளில் கூட இல்லாத வழக்கமாகும். இது குடும்பம், சமுதாயம் என்ற கட்டமைப்பை மீறுகிறது. மட்டுமல்ல ; இது ஒரு தீய அருவருப்பான செயல் என கருதப்பட வேண்டும்.

## முடிவுரை

பர்தாவின் முதல் அத்தியாயம் ஆண்கள் பார்வைகளை தாழ்த்தவும் பின்னரே பெண்களை குறித்து பேசுகிறது. எனவே குர்ஆன் வசனங்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பர்தா என்பது பெண்களின்

சுதந்திரமே அல்லாமல் அடுக்கு முறையல்ல.

அல்லாஹ் கூறுகின்றான் ;

(நபியே!) முஃமின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக! அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். தங்கள் வெட்கத்தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும். அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்தவற்றை நன்கு தெரிந்தவன்.

இன்னும் முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக! அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும். தங்கள் அலங்காரத்தை அதனின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக்கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக்காட்டலாகாது. இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள் அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள் அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள் அல்லது தங்கள் பெண்கள் அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அலங்காரத்தை வெளிப்படுத்தக்கூடாது.

மேலும் தாங்கள் மறைத்து வைக்கும் அலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம். மேலும் முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி) நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.

**- அல்குர்ஆன் : 24 : 30,31**

இஸ்லாம் ஆண் – பெண் இரு பாலினம் குறித்த கருத்து மிக அழகானது. ஆடை குறியீடு, உடனடி தலாக் (குலா), சொத்துரிமை எல்லாவற்றிலும்

இஸ்லாத்தில் பெண்களின் உரிமை பாதுகாக்கப்படுகிறது. இருவருக்கும் சமநீதி வழங்குவதன் மூலமே விடுதலை சாத்தியமாகும். ஆண் – பெண் சமத்துவம் குறித்த மேற்கத்திய தவறான கருத்துக்களைப் போன்றதல்ல இஸ்லாமிய கருத்தாக்கம்.

தம் பாலினத்தவர் தொடர்பும், திருநங்கைகளின் மாற்று அறுவை சிகிச்சையும், ஆணுக்கு நிகர் பெண்கள் வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதும், அரைகுறை ஆடைகள் அணிவதும், ஆடவர்களின் பணிகளிளெல்லாம் பெண்கள் பங்குபெறுவதும் போன்ற நவீனகால மேற்குலகின் சிந்தனைகள் ஆண் – பெண் சமத்துவம், சம உரிமையாக காண்பது திரும்பவும் பெண்களை பின்னோக்கி அடிமையாக்குவதே அன்றி வேறெந்த நலத்தையும் ஏற்படுத்தாது.

இஸ்லாம் பெண்களின் சமஉரிமை உள்ளடக்கிய சமநீதியை வலியுறுத்துகிறது. பெண்களின் கண்ணியம் காக்கிறது.

عن عائشة (رضی) قالت : قال رسول الله صلى الله عليه وسلم : خَيْرُكُمْ

خَيْرُكُمْ لِاَهْلِهِ وَاَنَا خَيْرُكُمْ لِاَهْلِيْ

உங்களின் மனைவி இடத்தில் சிறந்தவரே உங்களில் மேலானவர். நான் என் மனைவியிடத்தில் சிறந்தவனாகவே இருக்கிறேன்.

**- திர்மிதீ**